


11வது ஞானாச்சாரியார்

# 12வது ஞானாச்சாரியார்
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
## அவர்களின் எழுத்துக்கள்





12வது ஞானாச்சாரியார்

**புரட்டாசி மாத வெளியீடு**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112**

# ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

## “தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்”

கட்டுரையின் 2 ஆம் பகுதி

**“இந்துக்களே! இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்! இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனேயே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்!”**

**“இந்துவேதம் தழைக்க, இந்துமதம் பிழைக்க, உழைக்க ஞானாச்சாரியார் தலைமையை ஏற்றிட வருக! வருக!! வருக!!!”**

**“இந்துக்களே! இந்துவேதத்தையும் இந்துமதத்தையும் காப்பாற்ற வாருங்கள்”**

**“இந்துக்களே இந்துவேதத்தையும் இந்துமதத்தையும் புரிந்து கொள்ள வாருங்கள்”**

**“இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனடியாக இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்”**

**“இந்துக்களே! இந்துவேதம் தழைக்க இந்துமதம் பிழைக்க உழைக்க அழைக்கிறோம் வாரீர்! வாரீர்! வாரீர்!”**

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

# ஆதிசிவனுர் தமிழில் அருளிய

## இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்!

## இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்

## "தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"

இன்றைய நாட்டு நடப்பில் 'மதம்', 'சமயம்', 'கடவுள்', 'வேதம்', 'சாத்திரம்', 'கோயில்' என்ற சொற்களுக்கெல்லாம் மதிப்பே இல்லை, கிடையாது. பெரும்பாலும் யாருமே இச்சொற்களை நம்புவதில்லை. இன்னும் சொல்லப் போனுல், மேற்படிச் சொற்களெல்லாம் மூடநம்பிக்கைக்குரிய சொற்கள், ஏமாற்றுக் காரரின் சொற்கள், மதவெறியை வளர்க்கும் சொற்கள்? ... என்ற கருத்தோட்டமே தமிழக மக்களிடையே இருக்கின்றது என்ற இந்தக் கருத்தை, கருத்தோட்டத்தை மிகமிக நுட்பமாகச் சிந்தித்துத்தான் உரிய பதில் கண்டுள்ளோம் யாம். அதாவது, மேலே கூறியுள்ள வாசகங்களுக்கு உரியவர்கள் இன்றைய பெரும்பாலான தமிழ் மக்களாவார்கள்.

இந்தப் பெரும்பாலான தமிழ் மக்கள் இப்படிப்பட்ட கருத்தோட்டத்தையும், கருத்தையும் எப்படிப் பெற்றிட்டார்கள்? ஏன் பெற்றிட்டார்கள்? எப்பொழுது பெற்றிட்டார்கள்? எவரால் பெற்றிட்டார்கள்? என்று முறையாக விஞக்கள் எழுப்பி விடை காண வேண்டும்.

அதாவது தமிழகம் முழுவதும் கண்கவர் கலைச் சிற்பங்கள் உடைய விண்ணுயர்ந்த கோபுரங்கள் பெற்ற கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் பூசை அறை அல்லது பூசை மடம் இருக்கின்றது. ஒவ்வொரு தெருவிலும், தெருக்கோடி அல்லது தெருச் சந்தியிலும் கோயில் இருக்கிறது. ஒவ்வொரு ஊரின் எல்லையிலும் கிராம தேவதை, காவல் தெய்வங்களுக்கு கோயில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கடை, தொழில் கூடம், கல்வி நிறுவனம், மருத்துவ மனை, அரசு அலுவலக வளாகம்.... என்று அனைத்து இடங்களிலும் கடவுள்களின் படங்கள், சிலைகள், சிறிய கோயில்கள் என்று ஏதாவது ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு கோயிலிலும் வெள்ளி, செவ்வாய், அமாவாசை, முழுநிலவு, கிருத்திகை, திருவிழா என்றுள்ள நாட்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகின்றது.

பெரும்பாலான மக்கள் அன்றுடம் காலையிலோ அல்லது மதியத்திலோ அல்லது மாலையிலோ அல்லது இரவிலோ கடவுளை நினைத்துக் கும்பிடாமல் இருப்பதில்லை. நெற்றியில் திருநீறு அல்லது குங்குமம் அல்லது நாமம் ... வைத்துக் கொள்ளத் தவறுவதில்லை. ஏறத்தாழ இந்நாட்டு மக்களில் எல்லோருடைய குடும்பத்திலும் பிறப்பு, திருமணம், பெண்கள் பருவமடைந்த சடங்கு, இறப்பு, கருமாதி, புதிய தொழில் தொடங்குவது, புதுமனை புகுவது முதலிய எந்த நிகழ்ச்சியாஞலும் சரி, அதற்குப் 'பாரம்பரிய வழக்கம்', 'குல வழக்கம்', 'ஊர் வழக்கம்' ... என்ற பெயரில் சாத்திரப் படி, இந்துமதப் படி குறிப்பிட்ட சடங்குகளைச் செய்வதும், பூசை செய்வதும், கடவுளைக் கும்பிடுவதும் **முறையாக, முழுமையாக நிகழ்த்தப் பட்டே வருகின்றன! நிகழ்த்தப் பட்டே வருகின்றன!! நிகழ்த்தப் பட்டே வருகின்றன!!! என்பதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!! இந்த உண்மையை யாராலும் மறைக்க முடியாது! மறுக்க முடியாது!! மறைக்க முடியாது! மறுக்க முடியாது!! மறைக்க முடியாது! மறுக்க முடியாது!! முடியாது!! முடியாது!! முடியவே முடியாது!!!.**

எனவே, பெரும்பாலான மக்கள் **நாத்திகர்களைச் சமாளிப்பதற்காகத்தான் உதட்டளவில் 'மதம்', 'சமயம்', 'கடவுள்', 'வேதம்', 'சாத்திரம்', 'கோயில்' ... முதலியவைகளை மறுக்கவும், வெறுக்கவும், எதிர்க்கவும், கேலி செய்யவும் முற்படுகிறுர்களே தவிர யாருக்கும் மேலே குறிப்பிட்டவைகளை விட்டுவிட்டு வாழுவதற்கு துணிவு இல்லை. (தைரியம்) வலிமை இல்லை. தெளிவு இல்லை! இல்லை! இல்லை!! இல்லவே இல்லை!!! எனவே, அவற்றை உணர்ந்தாவது தாய்மொழியான தமிழ்**

**மொழியினர்களே! நமது அப்பாவி மக்கள் சொல்லொன்று செயல் வேறொன்று என்று வாழும் இழிநிலையை, பழிநிலையை, அவல நிலையை, கேவல நிலையை உடனடியாகத் தடுத்து நிறுத்திட! அகற்றிட! உடனடியாக இந்து வேத ஆச்சாரியாராகுங்கள். அதுதான் நீங்கள் மனச்சாட்சி உள்ள மானுடராக மதிக்கப் படுவதற்கு உரிய செயலாகும்.**

**அப்படி யல்லாமல், யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? நாங்கள் வயிற்றுப் பிழைப்புக்குரிய தொழிலை, வேலையை முதன்மையாகக் கருதுகிறோம். எங்களுக்கு மட்டும் தமிழையும், தமிழினத்தையும், தமிழகப் பண்பாட்டையும், நாகரீகத்தையும் பாதுகாக்க வேண்டுமென்ற தலையெழுத்தில்லை, எங்களைப் போன்ற தமிழர்கள் அனைவருக்கும் இந்த அக்கறை வரட்டும். பிறகு பார்த்துக் கொள்வோம் என்று கூறக்கூடியவர்கள் நூற்றுக்கு எத்தனை விழுக்காடு பேர் உள்ளனர் என்று தெரிந்து கொள்ளத்தான் பதினெண் சித்தர் மடாதிபதி அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் சித்தர் அவர்களால் இந்த அறிவிப்பு அழைப்பு விடுக்கப் படுகின்றது.**

ஏனென்றால், **தமிழர்களுக்கே தங்களுடைய தாய்மொழியை, தாயக மக்களை, தாய்வழிப் பண்பாட்டை, நாகரீகத்தைக் காப்பாற்றிட வேண்டுமென்ற துடிதுடிப்போ, பதைபதைப்போ, அக்கரையோ, ஆர்வமோ பிறக்க வில்லை என்றால்???? !!!!** தமிழனும், தமிழ்மொழியும், தமிழ்மொழியின் இந்துவேதமும் இந்துமதமும் இனியும் வாழாது இறந்தொழியட்டும்! இறந்தொழியட்டும்!! இறந்தொழியட்டும்!!!... என்று முணுமுணுத்தபடியே எமது இறுதி மூச்சின் இதழசைவு இருக்க வேண்டும்! இருக்க வேண்டும்!! இருக்க வேண்டும்!!!.... இல்லையில்லை! இருக்கட்டும்! இருக்கட்டும்!! இருக்கட்டும்!!!.....

ஏ! வீழ்த்தப் பட்ட தமிழினமே! உன் விவேகத்தை ஒளியிட்டுக் காட்ட உன் மொழியாளர்களே முன் வரவில்லை என்றால்!!!! ???? !!! ??? !!! ??? .... யார்தான் உன்னைக் காப்பாற்றுவது!? ஓ! ஓ!! ஓ!!!.... அந்தோ பரிதாபம்!!!

மக்கள் 'இந்துமத வெறி கூடாது' என்ற கருத்தில் நாட்டமும், நம்பிக்கையும் கொண்டு வாழுகிறார்கள் என்று எண்ணுகின்ற நிலையே இன்றைய நாட்டு நிலை... அது மட்டுமல்ல **"நமது இந்துக்கள் மட்டும் மத உணர்வு தேவையில்லை, மதப்பற்று தேவையில்லை, மத இலக்கியங்கள் தேவையில்லை, மத நிறுவனங்கள் தேவையில்லை என்று எண்ணுவது இன்றைக்கு அதிகம்.**

**அதிலும் பொதுவாக இந்துக்களும், தமிழர்களும், 'இந்துமதத்துக்கும் தமிழருக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை', 'இந்துமதம் தமிழ்நாட்டுக்கு அன்னியரால் கொண்டுவரப் பட்ட அன்னிய மதமே'. 'தமிழ்மொழிக்கும் இந்து மதத்துக்கும் தொடர்பே இல்லை; இந்துமத நூல்கள் அனைத்தும் வேற்று மொழிகளில்தான் இருக்கின்றன'. 'இந்துமதம் தமிழ்மொழியை வெறுக்கிறது, மறுக்கிறது, எதிர்க்கிறது, பழிக்கிறது, இழித்துரைக்கிறது, அழித்து வருகிறது.' 'இந்துமதம் தமிழர்களை பிறர்க்கு அடிமையாக்குகிறது. இந்துமதம் தமிழர்களை முட்டாள்களாக, அடிமைகளாக, இழி பிறப்புக்களாக மாற்றுகிறது....' என்ற நெஞ்ச உணர்வுப் போக்கும், சிந்தனைக் கருத்தோட்ட நோக்கும் உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்!! இருக்கிறார்கள்!!!**

**இவர்களை இதே நிலையில் தொடர்ந்து இருக்குமாறு செய்வதில்தான் இந்த நாட்டுச் சமய சீர்திருத்த வாதிகள், நாத்திக வாதிகள், பகுத்தறிவு வாதிகள், சமுதாயச் சீர்திருத்த வாதிகள், வாக்குச் சீட்டு வேட்டையாடும் அரசியல்வாதிகள்.... முதலியோர் அனைவரும் முழுமூச்சாக, கண்மூடித்தனமாக, வறட்டுத் தனமாக, முரட்டுப் பிடிவாதமாக அக்கறை காட்டுகிறார்கள்! அக்கறை காட்டுகிறார்கள்!! அக்கறை காட்டுகிறார்கள்!!!.... ஆனால், இவர்களில் பலருக்குத் தாங்கள் செய்வது தவறு, தாங்கள் சொல்வது பச்சைப்பொய் என்பது நன்றாகத் தெரியும். அதாவது, இன்று**

**நமது நாட்டில் வாழும் பெரும்பாலான சமயவாதிகளும், சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளும் நன்கு தெரிந்தே சிறப்பாகத் திட்டமிட்டே பொய்களைச் சொல்லி தவறுகளைச் செய்து பொதுமக்களை ஏமாற்றுகிறார்கள்! ஏமாற்றுகிறார்கள்!! ஏமாற்றுகிறார்கள்!!! மீதியுள்ள சமய வாதிகளும், சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளும்.... தாங்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தொடர்ந்து தவறுகளைச் செய்தும், பொய்களைக் கூறியும் அப்பாவி மக்களை ஏமாற்றி வாழுகிறார்கள். ஏமாந்தும் வாழுகிறார்கள். அதாவது, அவர்கள் குறிப்பிட்ட பெரும்பாலான திறமை சாலிகளின் கையாட்களாக, எடுபிடிகளாக, கூலிகளாக, ஆதரவாளர்களாக வாழும் அப்பாவிகளே ஆவார்கள்.**

**இப்படிப்பட்ட இக்கட்டான, சிக்கலான, சீரழிவான, அலங்கோலமான, வீழ்ச்சிக்குரிய நாட்டு நிலைமைகளை எண்ணிப் பார்த்துத்தான் பதினெண்சித்தர் மடாதிபதி நமது மக்களை திசைதிருப்பும், மயக்கும், கலக்கும், குழப்பும், போலியான அனைத்து கருத்துச் செய்திகளையும், சிந்தனைகளையும், உணர்வுகளையும், அணுகுமுறைகளையும்.... சமய சமுதாய அரசியல் கலை இலக்கியத் துறைகளிலிருந்து அகற்றுவதற்காகத்தான்! அகற்றுவதற்காகத்தான்!! அகற்றுவதற்காகத்தான்!!! கீழ்க்கண்ட ஒருசில பேருண்மைகளை வெளியிட முன்வந்துள்ளார்! முன்வந்துள்ளார்!! முன்வந்துள்ளார்!!!**

(1) செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதம்தான் அனைத்துச் சமய சமுதாய அரசியல் கலை இலக்கியச் சீர்கேடுகளையும் சரிப்படுத்தும்.

(2) செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதப் பூசைமொழி, பூசைவிதி, தத்துவம், சித்தாந்தம்... முதலியவைகள்தான் அகவாழ்வையும், புறவாழ்வையும் நலப்படுத்தும், வளப்படுத்தும், செம்மைப்படுத்தும்.

(3) செந்தமிழ் மொழியில் உள்ள இந்து வேத வாழ்வே மனிசரை மணிசராக்கும் [மண் + ஈசர் = மண்ணின் தலைவர், விலங்குகளோடு விலங்காக வாழும் மனிசர், மணிசர் அல்லது மனிதர். மனம் + ஈசர் = பண்பட்ட மனதின் தலைவராக விளங்கும் மனிசர்; மனிதர் = பண்பட்ட மனதை உடையவர்]

(4) இந்துவேத மதமான இந்துமதமே தமிழர் மதம். இதுவே சங்க இலக்கியங்களாக, பதினெண் மேல்கணக்கு நூல்கள் (இலக்கியங்கள்), பதினெண் மையக்கணக்கு நூல்கள் [சமய இலக்கியங்கள், மதத் துறை நூல்கள்], பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் [நீதி நூல்கள்] முதலியவற்றிலும் மற்றுமுள்ள ஐம்பெருங் காப்பியங்கள். ஐஞ்சிறு காப்பியங்கள், பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், கம்ப ராமாயணம், கந்த புராணம், திருவிளையாடல் புராணம், அரிச்சந்திர புராணம், வில்லிபுத்தூரார் பாரதம் [பெருந்தேவனார் பாரதம்], நளவெண்பா, சைவசமய சாத்திரங்கள் முதலிய அனைத்திலும் விளக்கப் பட்டிருக்கிறது.

**சிறப்புக் குறிப்பு:-**

(a) பதினெண்சித்தர் *மடம்*தான், **இந்து வேதத்தை** இம்மண்ணுலகுக்கு செந்தமிழ் மொழியில் (396 நூல்களில்) அருளியது. பதினெண்சித்தர் *பீடம்*தான் **இந்துமதத்தை** இம்மண்ணுலகுக்குச் செந்தமிழ் மொழியில் [36 நூல்களில்] அருளியது. இம்மடத்துக்கும் பீடத்துக்கும் தலைவராகத் தோன்றும் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் சித்தரே இந்துவேத நாயகமாக, இந்துமதத் தந்தையாக, இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராக விளங்குவார்.... என்ற பேருண்மைகளுக்கு ஏற்ப இன்று வாழும் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் சித்தர் ஆகிய யாம், இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பற்றி முதலில் இவை பிறந்த நாட்டாராகிய நம் தமிழருக்கு முறையாகவும், நிறைவாகவும் கூறியேயாக வேண்டும்.

(b) இந்துவேதம், இளமுறியாக் கண்டத்திலேயே கணக்கற்ற மொழிகளில் மொழியாக்கம் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட ஒன்று. இந்துவேதத்தின் தமிழ்மொழி ஒலிகள்தான் இந்த உலகின்

அருள் ஊற்றுக்கள் நிலவிடவும், அருளாளர்கள் தோன்றவும் செய்திடுகின்றன.

(c) இந்து மதத்தின் மூலவர்களான பதினெண் சித்தர்கள்தான், தங்களுடைய துணைத் தலைவர்களான பதினெட்டாம்படிக் கருப்புக்களையும், தாங்கள் தோற்றுவித்த நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களையும், அண்டபேரண்டங்களிலிருந்து தாங்கள் அழைத்து வந்த நாற்பத்தெட்டு வகைக் கடவுள்களையும், நாற்பத்தெட்டு வழிபடு நிலையினர்களையும் பயன்படுத்தி, இப்பூவுலகு முழுதும் உள்ள அருளூறு ஊற்றுக்களை கண்டறிந்து; அந்த அருளூறு ஊற்றுக்கள் என்றென்றும் மக்களுக்குப் பயன்படும் நாற்பத்தெட்டுவகைக் கோயில்களைக் கட்டினுர்கள்.

அம்மட்டின்றி இப்பூவுலகில் மழை, காற்று, கடல்கோள் (கடல் பொங்குவது), நிலநடுக்கம் முதலியவைகளால் நிலப் பகுதிகள் சிதைவதும், அழிவதும், நீருள் மூழ்குவதும், புதிய நிலப் பகுதிகள் நீருள்ளிருந்து தோன்றுவதும் நிகழக் கூடும் என்பதால் இந்த உலகில் நிலத்திலும், நீர்ப்பகுதியிலும் உள்ள அனைத்து அருளூறு ஊற்றுக்களையும் கண்டு பிடித்து அவற்றையும் மானுடருக்குப் பயன்படும் படிச் செய்திடவே (i) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட **"கருவறைகள்"**, (ii) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட **"வெட்டவெளிக் கருவறைகள்"**, (iii) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட **"வழிபாட்டுநிலையக் கருவறைகள்"**, (iv) நாற்பத்தெட்டு வகைப்பட்ட (48) **"கோயில் மூலக் கருவறைகள்"** எனும் நான்கு வகையினை உருவாக்கினுர்கள். இப்படி உருவாக்கப் படுகின்ற நான்கு வகைப்பட்ட கருவறைகளுக்கும் முதன்முதலில் (ஆரம்பத்தில்) அருளேற்றும் பூசைமுறைக்கு உயிர்ப்பு ஊட்டும் குடமுழுக்கு பூசைமுறையையும், இப்படி உயிர்ப்புமுறை குடமுழுக்குப் பூசைமுறை மூலம் உருவாக்கப் பட்ட நான்கு வகைப்பட்ட கருவறைகளையும் மீண்டும் விரிவாக்கியோ, செப்பனிட்டோ, திருப்பணிகள் செய்தோ புத்துயிர்ப்புச் செய்வதற்கு புத்துயிர்ப்பு ஊட்டும் புத்துயிர்ப்பு குடமுழுக்குப் பூசைமுறையையும் உண்டாக்கினுர்கள். இவை பற்றிய முழுமையான விளக்கங்களை **'பதினெண் சித்தர்களின் குடமுழுக்குப் பூசைமுறை'** என்ற நூல் விளக்குகிறது. இத்துடன் குடமுழுக்குப் பூசைமுறைகளைச் செய்யக் கூடிய ஆச்சாரியார்கள் வாழையடி வாழையெனப் பாரம்பரியமாகத் தோன்றவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள் பதினெண் சித்தர்கள்.

எனவேதான், **"இந்த உலகம் முழுதும் உள்ள எல்லா மதத்துக்கும் உரிய மூலக் கோயில்கள் அனைத்தும் தமிழர்களால்தான் கட்டப்பட்டவை. தமிழ்மொழியின் வேதங்களால்தான் உயிர்ப்பு ஊட்டப் பெற்றவை"** என்று பதினெண் சித்தர்கள் கூறுகிருர்கள். இதைத்தான்;

(1) அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழி.

(2) தமிழர்கள்தான் அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், நாயகங்கள், வாரிசுகள், சொத்துக்கள், தத்துவ வித்துக்கள்.

(3) தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும் தான் அருளுலக நாற்றங்கால்கள், நாற்றுப் பண்ணைகள், விதைப் பண்ணைகள்.

(4) தமிழகம்தான் கடவுள்களுக்கும், வழிபடு நிலையினருக்கும் பிறந்தகம், தாய்நாடு.

(5) தமிழ்நாடுதான் இம்மண்ணுலக முதல் மானுடர் தோன்றிய இடம்.

(6) தமிழ்நாடுதான் மானுடப் பண்பாட்டுக்கும், நாகரீகத்துக்கும் தொட்டில், ஆரம்பப்பள்ளி.


(7) தமிழ்மொழிதான் உலக மொழிகள் அனைத்துக்கும் மூலமொழி, முதல்மொழி, தாய்மொழி, கருமொழி.

இந்த உலகில் தோன்றக் கூடிய வேதங்களும், வேதமதங்களும், அண்ட

பேரண்டமாளும் இந்துவேதம் எனும் ஆலமரத்தின் கிளைகளாகவோ, விழுதுகளாகவோதான் இருக்க முடியுமே தவிர வேறு எந்த ஒரு தனித்த நிலையையும் பெற முடியாது.

இந்த உலகின் எந்தப் பகுதியில் அருளாளர்கள் தோன்றினாலும் சரி, அவர்கள் அண்ட பேரண்டமாளும் இந்துவேதம் எனும் கனிமலர்ச் சோலையிலே கனிந்த கனிகளாகவோ அல்லது பூத்த மலர்களாகவோதான் இருக்க முடியும் என்கின்ற கருத்தோட்டமும், கருத்து நோக்கும், கருத்துப் போக்கும் உடைய வாசகங்களைப் பதினெண்சித்தர்கள் இந்துவேத நூல்களிலும், இந்துமத நூல்களிலும் எழுதி யுள்ளார்கள்.

(d) இப்படி மேலே a, b, c என்ற மூன்று இலக்கங்கள் இட்டுக் குறிப்பிட்டுள்ள செய்திகளையே இந்தச் சிறப்புக் குறிப்பில் குறிப்பிட விரும்புகிறோம் யாம். எனவே, 'இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடத்தின் குருதேவர்' என்ற முறையில் யாம், இந்துவேதம் பற்றியும், இந்துமதம் பற்றியும் ஒருசில கருத்துக்களை மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பி இந்த நூலில் கூறுவதை யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்துக் கொள்ளுகிறோம்.



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர்**

(5) அடுத்து எமது பேச்சும், எழுத்தும், செயலும் கண்டு நம் நாட்டு மக்கள் கடந்த பல ஆண்டுகளாக ஒரே மாதிரியான கருத்தையே வெளியிட்டு வருகிறார்கள். எனவே, அவர்களின் ஒரு சில கருத்தோட்டங்களை இப்பகுப்பில் குறிப்பிட்டு விளக்கம் தர முற்படுகிறோம் யாம்.

(a) செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதம்தான் அனைத்துச் சமய சமுதாய அரசியல் சீர்கேடுகளையும் சரிப்படுத்தும்.

(b) செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதப் பூசைமொழி, பூசைவிதி, தத்துவம், சித்தாந்தம் .... முதலியவைதான் அகவாழ்வையும், புறவாழ்வையும் நலப்படுத்தும், வளப்படுத்தும், செம்மைப்படுத்தும்.

(c) செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேத வாழ்வே மணீசரை மனிதராக்கும்.

(d) இந்துவேத மதமான இந்துமதமே தமிழர் மதம். இதுவே தமிழ்மொழியிலுள்ள சங்க இலக்கியங்களான

(I) **பதினெண் மேல்கணக்கு நூல்கள்** எனப்படும் மானுட வாழ்வை விளக்கும் இலக்கியங்கள். இவை (i)நேத்தர (ii)நேத்திர (iii)நேத்திற (iv)வேத்தர (v)வேத்திர (vi)வேத்திறங்கள் என்று வாழ்வியலின் ஆறு வகைப்பட்ட நிலைகளை கலைகளை விளக்குகின்றன.

(II) **பதினெண் மையக்கணக்கு நூல்கள்** எனப்படும் மதத்துறை வாழ்வுக்குரிய இலக்கியங்கள். இவை (i)சாத்தர (ii)சாத்திர (iii)சாத்திற (iv)தோத்தர (v)தோத்திர (vi)தோத்திறங்கள் என்று மதத்துறையின் நிலைகளை கலைகளை விளக்குகின்றன.

(III) **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்** எனப்படும் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு முதலியவற்றுக்குரிய நீதிகளை, அறங்களை விளக்கும் இலக்கியங்கள். இவை (i)அத்தர, (ii)அத்திர, (iii)அத்திற, (iv)சூத்தர, (v)சூத்திர, (vi)சூத்திறங்கள்

என்று நீதித் துறையின் ஆறுவகைப் பட்ட நிலைகளை, கலைகளை விளக்குகின்றன.

(IV) ஐம்பெருங்காப்பியங்கள், (V) ஐஞ்சிறுங்காப்பியங்கள், (VI) பன்னிரு திருமுறைகள், (VII) நாலாயிர திவ்விய பிரபந்தங்கள், (VIII) கம்ப ராமாயணம், (IX) கந்த புராணம், (X) திருவிளையாடல் புராணம், (XI) அரிச்சந்திர புராணம், (XII) வில்லிபுத்தூரார் பாரதம், (XIII) நளவெண்பா, (XIV) சைவ சமய நூல்கள், (XV) முத்தொள்ளாயிரம், (XVI) பெருங்கதை, (XVII) தொண்ணூற்றாறு பிரபந்தங்கள்... முதலியவற்றில் விளக்கப் பட்டிருக்கிறது.

(e) **'இந்துவேதம் தமிழ் மொழியில்தான் முதன் முதலில் எழுதப் பட்டது.'**

(f) 'தமிழ்மொழிதான் இந்துமதத்தின் பூசைமொழி, அருளுலக ஆட்சி மொழி' என்றெல்லாம் கூறுவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? என்று கேட்பவர்கள் அன்பு கூர்ந்து பொறுமையாகவும், பொறுப்பாகவும் இந்த (5)வது பிரிவில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் திருப்பித் திருப்பிப் படிப்பார்களேயானால் கூடப் போதும்; அவர்களுக்கே இவ்வாசகங்களால் என்னென்ன பயன்கள் ஏற்பட்டிடும்? விளைந்திடும்?? உருவாகிடும்??? என்ற வினாக்களுக்குரிய பதில்களைப் பெற்றிடலாம்! எளிதாகவே பெற்றிடலாம்! இப்பதில்களுக்காக மிகப் பெரிய, பெரிய ஆராய்ச்சிகளை யெல்லாம் செய்யத் தேவையில்லை! செய்யத் தேவையில்லை!! செய்யத் தேவையில்லை!!! செய்யத் தேவையேயில்லை.

(6) இருப்பினும், 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' [I.M.I., இ.ம.இ.] என்ற சமய சமுதாயச் சீர்திருத்த இயக்கமும்; 'இந்து முன்னேற்றக் கழகம் [I.M.K., இ.மு.க.] என்ற அரசியல் சீர்திருத்தக் கழகமும், பதினெண் சித்தர் பீடத்துக்குரிய வகையில், அதாவது கி.மு.100 முதல் கி.பி.150 வரை வாழ்ந்திட்ட பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் அவர்கள் இக் கலியுகத்து மக்களை இந்துவேத வழியிலும், இந்து மத வழியிலும், சமய சமுதாய அரசியல் சீர்திருத்தங்களைப் பெற்றிட வேண்டும் என்பதற்காகவே; மேற்படி இ.ம.இ., இ.மு.க. என்ற இரண்டு நிறுவனங்களைத் தோற்றுவித்துச் செயல்பட்டிட்டார்.

அவரைப் பின்பற்றியே தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களும் மேற்படி இரண்டு நிறுவனங்களையும் தோற்றுவித்துச் செயல்பட்டிட்டார். அதனாலேயே அவர், அவருடைய விருப்பம் போல் தம் வாழ்நாளுக்குள் (கி.பி.785 முதல் கி.பி.1040 வரை) 'இந்துமத அருட்பேரரசு' [THE INDU DIVINE KINGDOM] ஒன்றினைப் 'பிற்காலச் சோழப் பேரரசு' என்று உருவாக்கினார். அப்பேரரசின் மூலம் இவர் சமய, சமுதாய, அரசியல் சீர்திருத்தங்களைச் செய்யலானார். குமரி முதல் இமயம் வரை இந்துமத அருட்பேரரசை வடிவப் படுத்தினார்;

ஆனால், பிற்காலச் சோழப் பேரரசின் அரச குடும்பத்தார் இவரோடு முழுமையாக ஒத்துப் போகவில்லை என்பதால் இவர் தஞ்சைப் பெரிய கோயிலை (சத்தி இலிங்கம்) முழுமையாகக் கட்டி முடிக்காமலும்; கங்கை கொண்ட சோழபுரக் கோயிலைக் [சீவ இலிங்கம்] கட்ட ஆரம்பித்த ஆரம்ப நிலையிலேயே நிறுத்தியும்; தாராபுரம், தாராசுரம், தாரமங்கலம் என்ற மூன்று கோயில்களையும் (இலிங்கம்) முழுமையாகக் கட்டி முடிக்காமலும், குமரி முதல் இமயம் வரை ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது (1359) இந்துவேத மடங்களையும், பீடங்களையும் தோற்றுவித்தும் அவற்றை முழுமைப் படுத்தாமலும், ஆழ்வார்களின் பாடல்களை, நாலாயிர திவ்விய பிரபந்தமாக ஒன்று திரட்டியது போல் சைவத் திருமுறைகளை ஒன்று திரட்ட எடுத்துக் கொண்ட முயற்சிகள் முழுமை பெறாமலும், நாடு தழுவிப் பல இடங்களில் பாலுகர் பள்ளி, சிறாஅர் பள்ளி, இளைஞர் பள்ளி,

இளமை கடந்தோரின் நட்டாள் பள்ளி என்று வயதின் அடிப்படையில் நான்கு வகைப்பட்ட பள்ளிகளை நிறுவித் ‘தமிழ்’, ‘தத்துவம்’, ‘சித்தாந்தம்’, ‘இந்து வேதம்’, ‘இந்து மதம்’, ‘சிற்பம்’, ‘ஓவியம்’, ‘மருத்துவம்’, ‘கட்டிடக் கலை’, ‘சேவலோன் போர்ப்பயிற்சி’, ‘உடற் பயிற்சி’, ‘ஓகாசனம்’, ‘யோகாசனம்’, ‘இசை’, ‘நாட்டியம்’, ‘அமைச்சு’, ‘அரசு’, ‘வாணிகம்’, ... எனப்படும் அறுபத்து நான்கு வகைப்பட்ட கல்வித் துறைகளையும் யார் வேண்டுமானாலும்; விருப்பத்துக்கும் அக்கறைக்கும், ஆர்வத்துக்கும், ஆற்றலுக்கும் ஏற்பக் கற்றுக் கொள்ள உரிய வாய்ப்பு வசதிகளைப் பெரிய அளவில் உருவாக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் முழுமையடையாமலும்; இந்துவேதமும், இந்துமதமும் உலக மக்கள் அனைவருக்கும் நிலையாகப் பயன்பட வேண்டுமென்று உருவாக்கிய ‘குருகுலம்’, ‘திருகுலம்’, ‘தருகுலம்’, ‘கருகுலம்’ ***[இவை நான்கும் வழக்காற்றில் ‘கருகுலம்’, ‘குருகுலம்’, ‘தருகுலம்’, ‘திருகுலம்’ என்று கூறப்படுவதே மரபு. ஆனால் இவற்றை நடைமுறைப் படுத்துவது முறையே 1. குருகுலம், 2. திருகுலம், 3. தருகுலம், 4. கருகுலம் என்பதேயாகும் என்பதை இங்கு குறிப்பிடுகிறோம்]*** எனும் நான்கும் முழுமையாகச் செயல்பட ஆரம்பிக்காத நிலையிலும், முதல் மூன்று தமிழ்ச் சங்க இலக்கிய இலக்கண நூல்கள் மூன்று கடல் கோள்களாலும், வைகைக்கரை மதுரையிலிருந்த நான்காவது தமிழ்ச் சங்கத்து இலக்கிய இலக்கண நூல்கள் நெருப்பாலும் கணிசமான அளவு கடந்து அழிந்ததால்; தமிழ் நூல்களைச் செப்பேடுகளில் எழுதவும், ஓலைச் சுவடிகளில் நகல் எழுதவும் நாடு முழுவதுமுள்ள தமிழாசிரியர்களைக் கொண்டு துவக்கிய மாபெரும் பணி முழுமையுறாமலும்.... இருந்த நிலையிலேயே மனம் வருந்தி கி.பி.1040இல் பங்குனி மாத முழுநிலவில் தஞ்சைப் பெரிய கோயில் வளாகத்தில் தாம் அமைத்த நிலவறைக்குள் சென்று நீள் தவத்தில் ஆழ்ந்திட்டார்.

(7) எனவேதான், நெடிய இடைவெளிக்குப் பிறகு பீடமேறியுள்ள யாம், அரை நூற்றாண்டுக்கு மேல் தாயக மக்கள், தாய்மொழி, இந்துவேதம், இந்துமதம், இந்துமதத்துக்குரிய இந்தியா, இந்துமதத்தால் காப்பாற்றப் படவேண்டிய உலக மக்கள்.... முதலிய அனைத்தையும் உற்றுநோக்கி உய்த்து உணர்ந்தவற்றால் எமது பணிகளை மிகமிக நிதானமாக நிகழ்த்துகிறோம்.

எமது முயற்சிகளைப் படிப்பறிவில்லாத பாமர மக்கள் முதல் படித்துப் பல பட்டங்கள் பெற்ற படிப்பாளிகள் வரை முறையாகவும், நிறையாகவும், நிகழ்த்தினோம். இதற்காகப் படியாதவர், படித்தவர் என்ற வேறுபாடின்றி அனைவரையும் குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் எனும் நான்கிலும் பயிற்சி பெறச் செய்தோம். நாடு முழுதும் பட்டி தொட்டி குக்கிராமம் சிறூர் பேரூர் நகரம் மாநகரம்.... முதலிய எல்லா இடங்களிலும் அருட் கோட்டங்கள் அமைத்து ‘அருளை அநுபவப் பொருளாக’ மருந்தாகவும் விருந்தாகவும் ஆக்கினோம்.

இந்துவேதத்தின் கொடையாகவும், இந்துமதத்தின் சாதனையாகவும் உள்ள (i) பிறப்பியல் (சாதகம் Horoscope), (ii) வரியியல் (கைரேகை Palmistry) (iii) அங்கவியல் (உறுப்பிலக்கணம் Physiological study for Prediction), (iv) பெயரியல் (பேர் ராசி Nameology), (v) மனையியல் (வாழிடக் கணிப்பு The Mystical study of the House) எனும் ஐந்து வகைப்பட்ட (பஞ்ச கலைகள், பஞ்சாங்க நிலைக் கலைகள்) கலைகளின் மூலம் மக்களின் வாழ்வியலுக்கு வழித்துணை நல்கும்படி நல்கினோம்.

ஏறத்தாழ பத்து கோடி அறிக்கைகளுக்கு மேல் அச்சிட்டு நாடு முழுதும் மழைத்துளி போல் வழங்கினோம். யாமும், எம்மால், குருபாரம்பரிய மரபுப்படித் தயாரிக்கப் பட்ட நாற்பத்தெட்டு வகை அருளாளர்களும் நாடு முழுதும் சுற்றி ஆயிரமாயிரம் சொற்பொழிவுகள் நிகழ்த்தினோம். எமது திருமடத்தால் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் அச்சாகி வெளிவரச் செய்தோம்.?!?!?! ஆனால்,!?!?!? ஆனால்!?!?! ஆனால்!?!?! எல்லா முயற்சிகளும் எங்கோ ஓடி மறைந்தன, மறைகின்றன. எனவேதான், ‘பைந்தமிழர்க்கு ஆற்றும் பணி சுடுமணலில்

ஊற்றிய பாலாயிற்று' என்று ஒரு குருபாரம்பரிய வாசகம் இருப்பதே எம் காலத்தும் மெய்யாயிற்று என்பதை உணர்ந்து, 'தமிழரின் சிந்தனையைத் தேடி', 'தமிழரின் மறுசிந்தனைக்கு', 'தமிழரே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்' என்ற தொடர் அறிவிக்கை அழைப்புகள் வெளிவருகின்றன.

(8) இந்த அறிவிக்கைகளால் தமிழர் ஒன்று திரண்டு, ஒற்றுமைப்பட்டு, ஒருமைப் பாட்டுடன் செயல்பட முடியும்! முடியும்!! முடியும்!!! ஏனெனில், தமிழர்களை ஒற்றுமைப் படுத்தும் ஆற்றல் சமுதாயத் தலைவர்களுக்கோ! அரசியல் தலைவர்களுக்கோ! நாத்திகவாதத் தலைவர்களுக்கோ! இலக்கியத் துறைத் தலைவர்களுக்கோ! கலைத் துறைத் தலைவர்களுக்கோ! இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!.... இப்பேருண்மை வெட்டவெளிச்சமாக எல்லோருக்குமே தெரிந்த, தெரிகின்ற, தெரியக் கூடிய ஒன்றாகும். சமயத்துறைத் தலைவர் அல்லது சமயத்துறைத் தத்துவத்தின் ஒன்றால்தான் அவிழ்த்துக் கொட்டப்பட்ட நெல்லிக் காய்கள் போல் எவ்விதக் காரண காரியமுமின்றி ஒற்றுமை என்ற நினைப்பே இன்றி ஆளுக்கொரு திசையை நோக்கி வேளைக்கொரு ஆசையை ஊக்கித் தலை தெரிக்க ஓடிக் கொண்டே இருக்கும் தமிழர்களை ஒன்று திரட்ட முடியும்! ஒன்று திரட்ட முடியும்! ஒன்று திரட்ட முடியும் என்று முடிவெடுத்து அதற்கேற்பச் செயல்படுகிறோம்.

(9) இதற்காகவே 'தமிழர்களுக்குத் தங்களுக்கென்று சமயம் உண்டு', 'தமிழரின் சமயம்தான் இந்துமதம்', 'இந்துமத நூல்களும் இந்துமதத்தின் தாயான இந்துவேத நூல்களும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இருக்கின்றன', 'இந்துமதத்தின் பூசைமொழி, பூசைக்குரிய மந்தர, மந்திர, மந்திறங்கள், பூசைவிதிகள், பூசாறி, குருக்கள், குருமார், குரு, குருதேவர், சாத்திரியார், தோத்திரியார், ஆச்சாரியார் முதலியவர்கள், சடங்குகள் .... எனப்படும் அனைத்தும் தமிழின மரபுக்கும், பாரம்பரியத்துக்கும், தமிழ் மொழிக்கும் உரியனதான்... என்ற பேருண்மைகளைச் சான்றுகளுடனும் ஊன்றுகளுடனும் நடைமுறையில் அநுபவப் பூர்வமாக அறியக் கூடிய எடுத்துக் காட்டுக்களுடனும், செய்முறைகளுடனும், பயிற்சிகளுடனும்.... வெளியிட்டு வருகிறோம் யாம்.

ஏனெனில், தமிழர்களுக்கிடையில் நாத்திகமும், கடவுள் வெறியும், மத மறுப்பும், ஆன்மீக எதிர்ப்பும், மத நிறுவனங்கள் மீதும், நிர்வாகத் தலைவர்கள் மீதும் பகையுணர்வும் அதிகமாக வளர்ந்ததற்குக் காரணமே 'இந்துவேதம்', 'இந்துமதம்', 'புராண இலக்கியங்கள்', 'பூசைகள்', 'பூசாறிகள்', 'சாத்திரங்கள்', 'சடங்குகள்', அன்னிய மொழியில் தான் இருக்கின்றன. அன்னியரிடம் தான் இருக்கின்றன என்ற தவறான கருத்துத்தான்! என்ற தவறான கருத்துத்தான்!! என்ற தவறான கருத்துத்தான்!!! இன்னும் சொல்லப் போனால் இத் தவறான கருத்துத்தான் தமிழர்களுக் கிடையில் நாத்திக உணர்வையும், கடவுள் வெறுப்புணர்வையும், மத மறுப்புணர்வையும், மத நிறுவனங்கள் மீதும், நிர்வாகத்தினர் மீதும், வெறுப்புணர்வையும் காட்டுத் தீ போல் வளர்த்தது!!!

எனவேதான், தமிழர்களுக்கு தங்களுடைய மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் வாழையடி வாழையென வரக்கூடிய உரிமைச் செல்வங்கள் இந்துவேதமும் இந்து மதமும்தான். இவற்றிற்குரிய நிறுவன நிர்வாகங்களும் இவற்றின் இயக்கச் சத்திகளான பூசாறி, குரு, குருக்கள், குருமார், குருதேவர், சாத்திரியார், தோத்திரியார்.... முதலியோர்கள்தான்.... என்ற பேருண்மை இப்பொழுது தெளிவாக்கப் படுகிறது! தெளிவாக்கப் படுகிறது!! தெளிவாக்கப் படுகிறது!!!

இந்த மாபெரும் பணியில் அணி அணியாகத் தமிழ்ப் பெருமக்கள் ஈடுபட வேண்டும்! ஈடுபட வேண்டும்!! ஈடுபட வேண்டும்!!! ஈடுபட்டேயாக வேண்டும்!!!! .... என்பதற்காகத்தான் **தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள் என்ற அறிவிப்பு அழைப்பு அறிவிக்கை** ... ஒரு தனிக் கட்டுரையாக... சிறிய வடிவில்

நூலாக வெளியிடப் படுகிறது! வெளியிடப் படுகிறது!! வெளியிடப் படுகிறது!!!

**"தமிழ்ப் பெருமக்களே! சிந்தனை செய்யுங்கள்"**

ஏற்கனவே! உங்கள் சிந்தனைகள் மதத்துறை பற்றி எடுத்துள்ள முடிவுகளை மறு சிந்தனைக்கு உரியவைகளாக்கிடுங்கள்.

பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் சித்தரின் அழைப்பை ஏற்றுத் தமிழினப் பண்பாடும், நாகரீகமும் காத்து வருவன பிழைக்க! தழைக்க!! உழைக்க!!! வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

---



**"ஒரு மாபெரும் உலக முதல் இனத்தைச் சூழ்ச்சியால் வீழ்த்தித் தொடர்ந்து துரோகிகளாலும், அப்பாவிகளாலும், கூலிகளாலும் அடக்கி யொடுக்கித் தாழ்த்தியே வாழ்ந்து வரும் ஒற்றுமையும், கட்டுப்பாடும், அறிவுக் கூர்மையும் உடைய ஓர் இனத்தை எதிர்த்து நேரடிப் போர் புரியத் தயாராகி வரும் அருளாட்சி நாயகமே யாம். எம் மீது நம்பிக்கையும், தன்னம்பிக்கையும், தன்மான இனமான உணர்வும், மொழிப்பற்றும், இனப்பற்றும், பண்பாட்டு விடுதலை நாட்டமும், ... உடைய பெருவீரர்களே எம்மைத் தொடர முடியும். நெருப்பாற்றில் நீந்துவதைப் போன்றதே இது?!?!"**

# தமிழர் நிலை பற்றிய சில விளக்கங்கள்

(1) (i) இந்துவேதத்துக்கும் மதிப்பில்லை, (ii) இந்து மதத்துக்கும் மதிப்பில்லை, (iii) தமிழ்மொழிக்கும் மதிப்பில்லை. எனவே, இந்தப் பதினெண் சித்தர் மடாதிபதியின் முயற்சி வீணன முயற்சியே! பயனில்லா முயற்சியே யாகும். பாவம், இவர். இவருக்கு இன்றைய தமிழர் நிலையை எடுத்துக் கூறுவார் யாருமில்லையா! இவரது முயற்சி பற்றி இவரையே, மறு சிந்தனை செய்யச் சொல்வது நல்லது! என்று பலர் மறைமுகமாகவும் சிலர் அஞ்சல் வழியாகவும் விரல் விட்டு எண்ணிடக் கூடிய அளவினர் நேரிலும் கருத்து தெரிவித்ததை, கருத்து தெரிவித்து வருவதை எண்ணி யெண்ணிப் பார்த்தே எமது முயற்சிகளுக்கும், நோக்குகளுக்கும், போக்குகளுக்கும் அடிப்படையாக உள்ள பேருண்மைகளில் சிலவற்றை மட்டுமாவது தமிழர்களுக்கு விளக்கிடல் வேண்டுமென்று முயலுகிறோம் யாம்.

(2) இன்றைய நாட்டு நடப்பில், 'இந்து வேதம்', 'இந்து மதம்', 'தமிழ்மொழி' என்ற மூன்றுக்குமே மதிப்பில்லை! மதிப்பில்லை!! மதிப்பில்லை!!! மதிப்பே இல்லை. இந்த உண்மையை யாமும் உணராமல் இல்லை. ஆனால், மதிப்பிழந்து கிடக்கும் **'இந்து வேதம்', 'இந்து மதம்', 'தமிழ்மொழி' எனும் இந்த மூன்றுமே எம்மை ஈன்றெடுத்த தாய்க்குச் சமமானவை.** எனவே எப்படி எமது தாயின் பாதிப்புக்களுக்குரிய காரண காரியங்களை ஆராய்ந்து உரிய பரிகாரங்களைத் தேடாமலிருக்க முடியும். என்னுடைய முயற்சியின் விளைவுகளைத் தமிழர்களுக்கு விவரித்தேயாக வேண்டும் என்பதே இன்றைய எமது பணிநிலை.

(3) **'இந்து வேதம்', 'இந்து மதம்', 'தமிழ்மொழி' என்ற மூன்றும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த மிக நெருக்கமான, ஒன்றுக்கொன்று ஆதாரமான நிலையில்தான் உள்ளன. இதுதான் உண்மையான நிலை. இந்த உண்மையான நிலையை விளக்குவதற்கு**

**உரிய சான்றுகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதே எமது முதல் வேலை.**

(a) இந்து வேதத்தில் சித்தி நிலைகள்:

1) பத்தர், 2) பத்தியார், 3) போத்தர், 4) போத்தியார், 5) புத்தர், 6) புத்தியார், 7) முத்தர், 8) முத்தியார், 9) சீவன்முத்தர், 10) சீவன்முத்தியார், 11) அருவசித்தியார், 12) அருவுருவ சித்தியார், 13) உருவருவ சித்தியார், 14) உருவ சித்தியார்.

(b) இந்து மதத்தில் கடவுளர் நிலை:

1) சிவனின் நிலைகள் பதினுன்கு,

2) இராமன் வனவாசம் ஏற்றுப் பிறப்பின் நோக்கம் நிறைவேற்ற எடுத்துக் கொண்ட காலம் பதினுன்கு ஆண்டுகள்

3) கண்ணன் தமது திருத்தோற்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றிட நிகழ்த்திய திருவிளையாடல்கள் பதினுன்கு

(c) தமிழ்மொழியின் இலக்கிய மரபுப்படி உலகியல் வாழ்க்கையின் நிலைகள் பதினுன்கு

1) தெய்வம், 2) மக்கள், 3) பறவை, 4) விலங்கு, 5) பூ, 6) மரம், 7) உணவு, 8) யாழ், 9) பண், 10) தொழில், 11) ஊர், 12) நீர், 13) பறை, 14) உயர்ந்தோர்

(d) சைவ சமயம் - சிவ சமயம் → சீவ சமயம் = இந்து மதம்

**இந்து மதத்தின் சாத்திரங்கள்:**

1) திருவுந்தியார், 2) திருக்களிற்றுப் படியார், 3) சிவஞானபோதம், 4) சிவஞான சித்தியார், 5) இருபா இருபஃது, 6) உண்மை விளக்கம், 7) சிவப்பிரகாசம், 8) திருவருட்பயன், 9) விஞ வெண்பா, 10) போற்றி பஃறெடை வெண்பா, 11) கொடிக்கவி, 12) நெஞ்சு விடு தூது, 13) உண்மை நெறி விளக்கம், 14) சங்கற்ப நிராகரணம்

இந்த (a), (b), (c), (d) என்ற நான்கு பட்டியல்களிலும் உள்ளவை 'இந்துவேதம்', 'இந்துமதம்', 'தமிழ்மொழி' என்ற மூன்றுமே மிகமிக நெருக்கமான தொடர்புகளைப் பெற்றுத் திகழுகின்றன என்ற பேருண்மையை மிகத் தெளிவாக விளக்குகின்றன. அதாவது, அண்ட பேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் மரபுகளையும் இந்துவேத மரபுகளையும், இந்துமத மரபுகளையும் ஒரே வகையான வடிவமைப்புக்-களைப் பெறுமாறுதான் செய்துள்ளனர் என்பதே உண்மை.

(4) மேற்படி உண்மையால் (a) 'தமிழ்மொழி', (b) தமிழ்மொழி அறிவு, (c) தமிழ்மொழி உணர்வு, (d) தமிழ்மொழிப் பெருமையும் உரிமையும் பேணல், (e) தமிழ்மொழி இலக்கிய இலக்கண வள வளர்ச்சி, (f) தமிழ் மொழியின் ஆட்சி, மாட்சி, மீட்சி .... என்ற முழக்கங்கள், நோக்குகள், போக்குகள், ஊக்குகள், ... அனைத்துமே இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் மறந்தோ! துறந்தோ!! மறுத்தோ! வெறுத்தோ!! பகைத்தோ! நகைத்தோ!! எதிர்த்தோ! புறக்கணித்தோ! ஒதுக்கியோ! பதுக்கியோ!! செயலுக்கு வர முடியாதவை! செயலுக்கு வர முடியாதவை!! செயலுக்கு வர முடியாதவை!!! செயலுக்கு வர முடியாதவையே யாகும். அதாவது, நாத்திகர்கள், பகுத்தறிவு வாதிகள், சீர்திருத்த வாதிகள் என்பவர்கள் இந்துவேதத்தையும் இவற்றுக்குரிய நிறுவன நிர்வாகங்களையும் கேலி செய்து, கிண்டல் செய்து, இழித்துப் பழித்துக் கூறி! மறுத்து வெறுத்துக் கூறி! பகைத்து நகைத்துக் கூறி! எதிர்த்துப் புறக்கணித்துக் கூறி.... ஏனோதானோவென்று செயல்படுகின்றன. எனவேதான்,

(i) தமிழுக்காகச் செய்யப்படும் எந்த முயற்சியும், தமிழர்களின் அகவாழ்வையும், புறவாழ்வையும், தொட முடியாதவைகளாகவே இருக்கின்றன.

(ii) தமிழ்மொழியின் உரிமைக்காகவும், பெருமைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் செய்யப்படும் போராட்டங்கள் தமிழர்

அனைவரும் புரியவோ! ஈடுபடவோ இயலாத ஒன்றாகவே ஆகி வருகின்றன.

(iii) பெரும்பாலான தமிழர்களுக்கு

'தமிழின் விழிச்சியே தமிழர்களின் விழிச்சி'
'தமிழின் எழிச்சியே தமிழர்களின் எழிச்சி'
'தமிழின் உயர்ச்சியே தமிழர்களின் உயர்ச்சி'
'தமிழின் வளர்ச்சியே தமிழர்களின் வளர்ச்சி'
'தமிழின் உரிமையே தமிழர்களின் உரிமை'
'தமிழின் ஆட்சி மாட்சி மீட்சியே தமிழர்களின் ஆட்சி, மாட்சி, மீட்சி'

..... என்ற பேருண்மைகள் புரியாதனவாக இருக்கின்றன.

(iv) இவற்றையெல்லாம் விடக் கொடுமை என்னவென்றால் **'தமிழ் வாழ்க' என்று சொல்லுபவர் யாராக இருந்தாலும் அவர் நாத்திகராக, கடவுள் வெறுப்பாளராக, மதமறுப்பாளர்களாக, ஆன்மீக உலகின் எதிரியாகவே இருப்பார்! இருக்க வேண்டும்! இருக்க முடியும்!! என்ற கருத்தோட்டமே பெரும்பாலான தமிழர்களுக்கிடையில் வளமாகவும், வலிமையாகவும் இருக்கின்றது! இருக்கின்றது!! இருக்கின்றது!!! எனவேதான், தமிழ்மொழியின் பெயராலோ! அல்லது தமிழ்மொழி வழிப்பட்ட தமிழினத்தின் பெயராலோ செய்யப்படக் கூடிய எந்தச் செயலும் நாடு தழுவிய ஆதரவைப் பெற முடியாத நிலையே தொடர்ந்து நீடித்து வருகின்றது.** இப்படிப்பட்ட அவலக் கேவல நிலைமைக்கு முடிவு கட்டத்தான், இன்றைக்குப் பதினெண்சித்தர் மடாதிபதி **'தமிழும், இந்துவேதமும் இந்துமதமும் பிரிக்க முடியாதவை', 'இந்துவேதமும் இந்துமதமும் தமிழ் மொழியில்தான் பிறப்பெடுத்தன', 'இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் தமிழ்மொழி மூலமாகத்தான் தெரிய, அறிய, ஆராய, புரிய, பயன்படுத்திப் பயனடைய முடியும்! முடியும்!! முடியும்!!!'** என்ற பேருண்மைகளை விளக்கப் புறப்பட்டிருக்கின்றார்.

எனவே, தமிழ்ப் பெருமக்களே! **தமிழின் உரிமையும், பெருமையும், அரிய பயனும், ஆன்மீக உலகச் செல்வாக்கும், இந்துவேதத்தோடும், இந்துமதத்தோடும் சேர்த்து வளர்ச்சி!, மலர்ச்சி!!, செழிச்சி!!! உயர்ச்சி!!!! ... அடைந்திட முயற்சி செய்வதற்காக இந்துவேத ஆச்சாரியாராகிடுங்கள்** என்ற வேண்டுகோளைப் பற்றி சிந்தனை செய்யுங்கள்! சிந்தனை செய்யுங்கள்!! சிந்தனை செய்யுங்கள்!!!

(5) யாம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, "'இந்துவேதம்', 'இந்துமதம்', 'தமிழ்மொழி' என்ற மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இவை பிரிக்கப்பட முடியாதவை" என்ற பேருண்மையை வெளிப்படுத்த முயலுவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது, தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஆத்திகர்களே யாவார்கள். இந்த ஆத்திகப் பெருமக்கள் எல்லோருமே

(a) 'இந்துவேதமும் இந்துமதமும் தமிழ்மொழிக்குத் தொடர்பே இல்லாதவை',

(b) 'இந்துவேதமும் இந்துமதமும் தமிழ்மொழி அல்லாத அன்னிய மொழியில்தான் இருக்கின்றன',

(c) 'இந்துவேத மந்திரங்களைச் சொல்வதாலும் சரி, இந்துமதப் பூசைகளையோ சடங்குகளையோ செய்வதாலும் சரி, ... தமிழ்மொழியில் எதையும் சொல்லக் கூடாது!, சொல்லக் கூடாது!! சொல்லக் கூடாது!!! சொல்லவே கூடாது',

(d) 'தமிழ்மொழியில் மந்திரம் சொன்னாலோ! பூசை செய்தாலோ எள்முனையளவு கூடப் பயன் ஏற்படாது'

(e) 'தமிழ்மொழிக்கும் மதத்துக்கும் அருளுக்கும் சத்தி சித்திக்கும் தொடர்பே இல்லை',

(f) 'தமிழ்மொழியைத் தாய்மொழியாக உடைய தமிழர்கள் இந்து வேத ஆச்சாரியாராகவோ, சாத்திரியாராகவோ, தோத்திரியாராகவோ இருக்க முடியாது! இருக்கக் கூடாது',

(g) 'தமிழ்மொழியைத் தாய்மொழியாக உடைய தமிழர்கள் இந்துமதக் கோயில்களில் குருவாகவோ! குருக்களாகவோ! குருமாராகவோ! குருதேவராகவோ!

பூசாறியாகவோ! இருப்பதற்குத் தகுதியில்லே! தகுதியில்லே!! தகுதியில்லே!!! தகுதியில்லவே இல்லே!!!' என்ற தவருன கருத்தைப் பெற்றிருக்கிருர்களே என்பதுதான் அக்காரணம்.

இக்காரணத்தைத் தமிழர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(a) 'இந்துவேதமும் இந்துமதமும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன',

(b) 'இந்துவேதப் பூசைகளேயும், இந்துமதச் சடங்குகளேயும் தமிழ்மொழியில்தான் சொல்ல வேண்டும், சொல்ல முடியும், சொன்னுல்தான் பயன் உண்டு,

(c) 'தமிழ்மொழியில் பூசைகளேயும் சடங்குகளேயும் செய்தால்தான் பயன் உண்டு என்பதை அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறுகளேயும், சந்தானக் குரவர்களான (i) மெய்கண்ட சிவாச்சாரியார், (ii) அருணந்தி சிவாச்சாரியார், (iii) மறைஞான சம்பந்தர் (மறைஞான சம்பந்த சிவாச்சாரியார்), (iv) உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வரின் வரலாறுகளும், தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரியார், திருவருட்பெருஞ்சோதி ஆண்டவர் வடலூர் திருவருட்பா வள்ளல் இராமலிங்க அடிகளார் முதலியோர் வரலாறுகளும் மெய்ப்பிக்கின்றன'.

(d) 'தமிழ்மொழியைத் தாய்மொழியாக உடைய தமிழர்கள்தான் 'குவலய குருபீடமாக', 'இந்துவேத நாயகமாக', 'இந்துமதத் தந்தையாக', 'இந்துமத ஆச்சாரியாராக', 'இந்துமதச் சாத்திரியாராக', 'இந்துமதத் தோத்திரியாராக', ... இருக்க முடியும்! இருக்க முடியும்!! இருக்க முடியும்!!! வேறு யாரும் இந்துமதத்தைப் பொறுத்தவரை தலேமை தாங்கவோ, வழிநடத்தவோ இயலாது! இயலாது!! இயலாது!!! இயலவே இயலாது.

(e) தமிழ்மொழியைத் தாய்மொழியாக உடைய தமிழர்கள்தான் இந்துமதக் கோயில்களில் குருவாகவோ! குருக்கள்களாகவோ!! குருமாராகவோ!!! குருதேவராகவோ!!!! பூசாறியாகவோ!!!! இருப்பதற்குத் தகுதியுண்டு! தகுதியுண்டு!! தகுதியுண்டு!!! என்ற மெய்யான கருத்தைத் தமிழர்களுக்கும், திராவிட இனக் குடும்பத்தைச் சேர்ந்தவர்க்கும், மற்ற இந்தியர்க்கும், உலகோர்க்கும் தெரிவித்திடும் மாபெரும் பணியை ஏற்றிடத் தமிழர்கள் அனேவரும் முன்வர வேண்டும்! முன்வர வேண்டும்!! முன்வர வேண்டும்!!! அதற்காகத்தான் 'தமிழர்களே இந்துவேத ஆச்சாரியாராகிடுங்கள்! 'தமிழர்களே சிந்தனே செய்யுங்கள்!! தமிழர்களே மறுசிந்தனே செய்யுங்கள்!!!' என்ற அழைப்பினே விடுக்கின்ருேம் யாம்.

(6) (i) இன்றைக்கு 'இந்துவேதக் கருத்துக்களே யார் மதிக்கப் போகிருர்கள்? (ii) இந்துவேதக் கருத்துக்களின்படி யார் வாழப் போகிருர்கள்? (iii) இந்துமதத்தைப் பற்றி யாருக்கு அக்கறை இருக்கிறது? என்ற வினுக்களே எழுப்பி விடை கண்ட பிறகுதான் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி தமிழர்களே நோக்கி அறிவிப்பு அழைப்பு விடுக்க முன்வந்துள்ளார்.

(7) நம் மக்கள் இந்துவேதக் கருத்துக்களே மதிப்பதற்கே ஆளில்லாத இன்றைய சூழலில் இந்துவேதக் கருத்துக்களேப் பரப்பிட இந்தப் பதினெண்சித்தர் மடாதிபதி எதற்காக வீணுன முயற்சிகளேச் செய்கிருர்??? என்று முணுமுணுப்பது எமது செவிகளில் விழுகின்றது. ஆனுல், மூன்று யுகங்களாகக் கோடானு கோடி மக்களால் மதிக்கப்பட்ட இந்துவேதக் கருத்துக்களே, இன்றைக்கு மதிப்பதற்கு ஆட்களில்லே என்பதற்காக இந்துவேத நாயகமாக திருத்தோற்றம் பெற்றுள்ள பதினெண் சித்தர் மடாதிபதியும், இந்துவேதக் கருத்துக்களே மதிக்கமாலிருந்து விட முடியுமா?

எனவே, 'இன்றைக்கு இந்துவேதக் கருத்துக்களே யார் மதிக்கப் போகிருர்கள்?' என்று எண்ணி யெண்ணிக் கணக்குப் போட்டுக் கண் கலங்கி கைபிசைந்து காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கத் தயாராக இல்லே, இந்துவேதநாயகம் இந்துமதத் தந்தை என்ற உரிமையையும், பெருமையையுமுடைய குவலய குருபீடம், இந்துமதத்தின் முழுமுதல் தலேமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர் ஆகிய

குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர், பதினெண்சித்தர் மடாதிபதி. எனவேதான் தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

(8) இந்துவேதக் கருத்துக்களின்படி யார் வாழப் போகிறார்கள்? என்று வினவெழுப்பி ஆராய்ச்சியில் இறங்கினால், இன்றைய வாழ்வியலில் உணவு, உடை, உறையுள், பயன்படுத்தும் பொருள்கள், பொழுது-போக்குகள்.... முதலியவை அனைத்தும் மேலைய நாட்டு முறையில்தான் உள்ளன. எனவே பெரும்பாலான மக்களிடையே 'தமிழ்ப் பண்பாடு', 'தமிழ் நாகரீகம்', 'தமிழ்த் தத்துவம்', 'தமிழுணர்வு' என்பவை எப்படி தழைக்க முடியும்? இவை தழைத்தால்தானே இந்துவேத உணர்வு தழைக்கும். அதன்மூலம் இந்துமதம் பிழைக்கும். எனவே இதை எண்ணித் தயக்கமோ! மயக்கமோ! தேக்கமோ! கலக்கமோ! குழப்பமோ! அடைவது விவேகமல்ல.

இந்துவேதக் கருத்துக்களின்படி எல்லோரும் வாழ்ந்த நிலையில் மாற்றம் ஏன் வந்தது? எப்படி வந்தது? எவரால் வந்தது? எப்போது வந்தது? அப்படி மாற்றம் ஏற்பட்டதை எவரும் எதிர்க்க வில்லையா? எதிர்த்தவர்கள் என்ன ஆனார்கள்? அந்த எதிர்ப்புணர்வு என்னவாயிற்று? ... என்ற வினாக்களை எழுப்பி சிந்திக்கும் போதுதான், இந்துவேத எதிரிகள், இந்துமத எதிரிகள், இந்துவேத துரோகிகள், இந்துமத துரோகிகள், தமிழ்மொழி துரோகிகள், தமிழினத் துரோகிகள் எப்படி யெப்படி யெல்லாம் நுட்ப திட்பமாக வெறி மாறாமல் செயல்பட்டுள்ளார்கள் என்ற பேருண்மை மிகப் பெரிய வரலாறுகளாக வெளிப்படுவதைக் கண்டு பிடிக்கலாம். ஆனால், இந்த வரலாறுகளை யாரிடம் சொல்லுவது? யாரிடம் சொல்லுவது?? யாரிடம் சொல்லுவது???!!!....

ஏனென்றால், ஏறத்தாழப் பெரும்பாலான தமிழர்கள் தமிழ்மொழியுணர்வோ, இனவுணர்வோ இல்லாத அநாதை யுணர்வு படைத்த அடிமை வாழ்வையும், கூலி வாழ்வையும் வாழ்வாகக் கொண்டிருக்கிறார்கள். அதாவது, தமிழர்கள் தங்களுடைய மதம் 'இந்து மதம்' என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத அப்பாவிகளாக! ஏமாளிகளாக இருக்கிறார்கள். தவறுதலான காலச் சூழல்களால் தமிழர்கள் 'வெறுமையான, தத்துவ ஆராய்ச்சியை உடைய சைவ சமயம்', 'தத்துவமோ சித்தாந்தமோ இன்றி ஆழ்ந்த பத்தி நெறியையே உடைய வைணவ மதம்' என்ற இரண்டையே தங்களின் மதமாக எண்ணுகிறார்கள். இது தவறு! தவறு!! தவறு!!!

தமிழர்களின் மதத்தில்;

தெற்கே கன்னியாகுமரிப் பகவதி, சூலி, நீலி, காளி, கபாலி, இசக்கி, பிறம்ம சத்தி... என்று ஆரம்பித்து; இன்றைய வடக்கே உள்ள சென்னை மாநகரம் வரை உள்ள சுடலை, சுடலையாண்டி, பேச்சி, முண்டகக் கண்ணி, காத்தாயி, கருப்பாயி, முண்டகக் கண்ணன், காத்தவராயன், கருப்பு, கருப்பண்ணசாமி, சின்னக் கருப்பு, பெரிய கருப்பு, சங்கிலிக் கருப்பு, வீச்சுக் கருப்பண்ண சாமி, காரணமூர்த்தி, சன்னாசி, சுடலைமாடன், சீவலப் பேரியாள், முத்தாரம்மன், முத்தையா, முத்தாலம்மன், அங்காளம்மன், அங்காள பரமேசுவரி, காடேரி, மாடேரி, வீடேரி, மாரியம்மன், எல்லைக் காளியம்மன், எல்லையம்மன், செல்லியம்மன், பாண்டி முனீசுவரர், ஆறுமுகமங்கலம் சுடலை, செட்டியாடத்து ஐந்து வீட்டுசாமி, குரங்கணி முத்துமாலையம்மன், காயாமொழி, முப்பிடாரி அம்மன், முப்பந்தல் இசக்கி அம்மன், திசையன்விளை சுடலைமாடன், வாகைவிளை அம்மன், தேரியூர் அம்மன், தண்டுபத்து அம்மன், நயினார்புரம் அம்மன், தண்வாங்காடு அம்மன், சிறு நாடார் குடியிருப்பு அம்மன், பூச்சிக்காடு அம்மன், செம்மறிக்குளம் அம்மன், வேப்பங்காடு அம்மன், சண்முகபுரம் அம்மன், சாத்தாங்குளம் சுப்பிரமணியபுரம் அம்மன், தருமபுரி பில்லியனூர் அக்கிரகார முனீசுவரர், காவேரிப்பட்டினம் முனீசுவரர், கெலமங்கலம் முனீசுவரர், மாண்ட அல்லி முனீசுவரர், திருநெல்வேலி பேராற்றுச் செல்வி அம்மன் (பேராச்சி அம்மன்), உச்சினி மாகாளி, சந்தன மாரியம்மன், ஆயிரத்தம்மன், கொம்பு மாடன், முண்டன், பாளையங்கோட்டை சாத்தான்

கோயில் (ஐயனார், சாத்தன், சாசுத்தா), இருக்கண்குடி மாரியம்மன், சாத்தான் குளம் வண்டி மறிச்சி அம்மன், மதுரை கோச்சடை முத்தையா, முத்தாளம்மன், தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர், தாத்தா மதுரை மொட்டைக் கோபுரத்து முனீசுவரர், தாத்தா புதுக்கோட்டை கொப்பணுங்கோட்டை முனீசுவரர், தாத்தா திருவரங்கத்து மொட்டைக் கோபுரத்து முனீசுவரர், தாத்தா கரூர் நாட் ராயர், நாச்சி முத்து, முனியம்மாள், கருப்பு, ஆத்தா கரூர் சோழியாயி, முத்தையா, நாமக்கல் மோகனூர் செல்லியம்மன், நாவலடியான், சேலம் கோட்டை முனீசுவரர், மாரியம்மன், மாட்டுவேலன்பட்டி முனீசுவரர், அகரைப்பட்டி முனீசுவரர், அரியானூர் பாத முனீசுவரர், மேட்டூர் முனீசுவரர், வெண்ணங்கொடி முனீசுவரர், வெண்ணந்தூர் ஐந்து முனீசுவரர், மல்லூர் அல்லியேரி முனீசுவரர், சேடர்பாளையம் பெரிய முனீசுவரர், தாரமங்கலம் முனீசுவரர், வேம்படிதாளம் மேட்டுக்காடு கருப்பண்ணசாமி, கரூர் கொடுமுடி முத்தூர் மாரியம்மன், கரூர் வெள்ளக்கோயில் முத்துக்குமாரசாமி, ஈரோடு கொல்லிமலை வாகைக் கருப்பு, இரட்டை முனீசுவரர், வீரப்பூர் மந்திர மகாமுனீசுவரர், பெரிய காண்டி அம்மன், தொட்டியம் மருதக்காளி, செறுவாச்சியூர் மருதக்காளி, குலக்கொடி எழுவாண்டி அம்மன், ஓமாந்தூர் கருப்பு, இரட்டைமலை ஒண்டிக் கருப்பு, மாசி பெரியண்ணசாமி, ஆதனக்கோட்டை வீரம்மாள், உறையூர் வெற்றிவேல் தடக்கைக் காளி, மேட்டுப் பாளையம் வனபத்திரக் காளி, சிவகெங்கை வெட்டுடையார் காளி, மதுரை மடப்புரம் காளி, சமயபுரம் மாரியம்மன், நார்த்தாமலை மாரியம்மன், திருவப்பூர் மாரியம்மன், புன்னைநல்லூர் மாரியம்மன், வீரபாண்டி கௌமாரியம்மன், மதுரை வண்டியூர் தெப்பக்குளத்து மாரியம்மன், இராசிபுரம் அத்தனூர் அம்மன், விருத்தாசலம் இறைச்சிக் காளி, .... என்று எண்ணற்ற கடவுள்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆடு, கோழி, மீன், ... என்று குருதிப்பலியும், சமைத்த இறைச்சிப் படையலும் பெற்றுத் தங்களைக் குலதெய்வமாக உடையவர்களை யெல்லாம் காப்பாற்றுகின்றனர். இக் கடவுள்களைக் குடும்ப தெய்வமாக உடையவர்களின் இல்லங்களுக்கே இக்கடவுள்கள் சென்று ஒவ்வொரு தனிமனிதரையும் காப்பாற்றுகின்றனர்.

இப்பேருண்மையினை உணர மறுத்தும், வெறுத்தும், எதிர்த்தும், பகைத்தும், நகைத்தும் செயல்படக் கூடிய இன்றைய தமிழர்களைப் பற்றி எண்ணி யெண்ணியே இந்து வேதத்தைப் பிழைக்க வைப்பதும், இந்து மதத்தை ஆட்சி மீட்சி பெறச் செய்வதும்தான் உரிய வழி, நேரிய வழி, இன்றியமையாத வழி.... என்று முடிவெடுக்க நேரிட்டது. அதனால்தான், **'தமிழை நன்கு கற்றுத் தமிழ்ச் சிந்தையும், தமிழ் நெஞ்சும் உடைய தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்!! தோத்திரியாராகுங்கள்!!' என்ற அழைப்பு அறிவிப்பு அழைப்பாக வழங்கப் படுகிறது! வழங்கப் படுகிறது! வழங்கப் படுகிறது!**

(9) இன்றைக்கு இந்துமதத்தைப் பற்றி யாருக்கு அக்கறை இருக்கிறது? யாருக்குமே இந்துவேதம் பற்றிய அக்கரை யில்லாத இந்தக் காலத்தில் இந்தப் பதினெண்சித்தர் பீடாதிபதி அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் சித்தர் ஏன் கவலைப்படுகிறார்? எதற்காக இந்துவேதம் பற்றிப் பேச முற்படுகின்றார்? என்ன எதிர்பார்த்து இந்துவேதத்தை மீண்டும் வெளிக் கொணர்ந்து செல்வாக்குப் பெறச் செய்ய விரும்புகிறார்? இந்துமதமே இருந்த இடம் தெரியாமல் போய்க் கொண்டிருக்கும் போது! இந்துவேதத்தை எப்படி நிலை நிறுத்த முடியுமென்று நம்புகின்றார்? இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகு 'இந்துமதம்' என்ற பெயர் கூட இல்லாமல் போய்விடக் கூடுமென்று பெரும்பாலோர் எண்ணுகின்ற இன்றைய நிலையில்; எண்ணுகின்ற இன்றைய நிலையில் இவர் மட்டும் ஏன் வீணான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இந்த முயற்சியை விட்டுவிட்டு வேறு ஏதாவது ஆக்கப் பூர்வமான பணியில் இந்தச் சித்தர் ஈடுபடக் கூடாதா?!?!?!.... என்று பலரும் வெளிப்படையாக, நேரிடையாகக் கருத்துக் கூறுகின்ற நிலையில்தான் அந்தணர்

அண்ணல், ஞாஞச்சாரியார், சித்தர் தமது முயற்சிகளைத் தொடருகின்ருர். ஏனெனில், 'தீப்பெட்டியிலிருந்து ஒரு தீக்குச்சியை எடுத்து உரசியவுடன் வெளிப்படுகின்ற நெருப்புச் சுடர்; தன்னைச் சுற்றியுள்ள காரிருளைக் கண்டு பயப்படுவதில்லை; ஆனுல், அந்நெருப்புக் குச்சியின் சுடர், தான் அணையும் வரை தன்னை ஏற்றியவருக்குத் தேவையான வெளிச்சத்தைக் கொடுத்து விட்டுத்தான் மறைகிறது. அதைப் போலவே அந்தணர் அண்ணல் ஞாஞச்சாரியார், சித்தர் தன்னைப் பெற்றெடுத்த பெற்ரேருக்கும், அவரது தாய்மொழிக்கும், இனத்துக்கும், தன்ஞலியன்ற அறிவொளியைப் பரப்பிடவே முயலுகிருர்.

அதாவது, **அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்கள், தங்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளிய இந்துவேதத்தின் செயல்வடிவமான இந்துமதம் உயிரோடும் உடலோடும் வாழ்வதற்குக் கடல் போல் விரிந்த கருங்கல் கோயில்கள், கண்கவர் கலைச் சிறப்பு மிக்க சிற்பங்களோடு கூடிய விண்ணுயர்ந்த கோபுரங்களோடு எண்ணற்று நாடு முழுதும் செம்மாந்து நிற்கும் போது இந்துவேதம் மட்டும் ஏன்; தான் பிறந்த மொழியினராலேயே முழுமையாக மறக்கப்பட்டு இருந்த இடமே தெரியாமல் போயிற்று? இருந்த இடமே தெரியாமல் போயிற்று?! இருந்த இடமே தெரியாமல் போயிற்று???!!!**

(10) இப்படி முறையாக இந்துவேதம் பற்றி எண்ணிப் பார்க்கும் போது; ஏற்பட்டிட்ட குழப்பம், கலக்கம், காரணகாரியம் காணமுடிய அவலநிலை, உலகத்தார் கவனத்துக்கே வராத பல பேருண்மைகள் பற்றிய மின்னல் கீற்று, எண்ண ஓட்டங்கள்... முதலியவை இந்துவேதம் பற்றிய சிந்தனைகளையும், உணர்வுகளையும் இயல்பாகவே ஊக்குவித்தன. எனவேதான், இந்துவேதம் பற்றிய அக்கரையும், ஆர்வமும், ஈடுபாடும்.... உடையவர் இன்றைக்காவது உருவாக்கப்பட வேண்டுமென்ற முயற்சியில் இந்துவேத வரலாற்றிலும், போதனையிலும், சாதனையிலும் கருத்தூன்றி உழைப்பைச் செலவிட நேரிட்டது.

(11) இன்றைக்குத் தமிழர்கள் மட்டுமே! தாய்மொழிப் பற்று, தாய்மொழிப் பெருமித உணர்வு, தாய்மொழி உரிமையுணர்வு, தாய்மொழி வழிப் பண்பாட்டு உணர்வு, தாய்மொழி வழி அக புற நாகரிக உணர்வு.... என்று எந்த விதமான தாய்மொழிப் பற்ரே! பாசமோ! ஈடுபாடோ! விருப்பமோ இல்லாமல் வாழுகிருர்கள்! வாழுகிருர்கள்!! வாழுகிருர்கள்!!! இன்னும் சொல்லப் போனுல் இன்றைய தமிழர்கள் மட்டும்தான் இந்த உலகிலேயே தங்களுடைய தாய்மொழியல்லாத மற்ற மொழிகளை மட்டுமே மதிப்பவர்களாக, போற்றுபவர்களாக, ஏற்றுச் சிறப்புச் செய்பவர்களாக இருக்கிருர்கள். இவற்ருல் இன்றைய தமிழர்கள்; தங்களுடைய தாய் தந்தையர், உடன் பிறந்தோர், நண்பர், காதலன், காதலி, கணவன், மனைவி, மழலை பேசும் குழந்தை.... என்று அன்ருட வாழ்வில் தொடர்புடைய அனைவருடனும் அன்னிய மொழியிலேயே உரையாடி உறவாடி மகிழ்கிருர்கள். இப்படி அன்னிய மொழி வழி வாழ்வதையே பெரும்பாலான இன்றைய தமிழர்கள் பெருமையாக, மதிப்பாக, உயர்வாக.... எண்ணுகிருர்கள்! எண்ணுகிருர்கள்!! எண்ணுகிருர்கள்!!! இந்த எண்ணத்தின் வெளிப்பாடாகவே இன்றைய தமிழர்களில் அநேகம் பேர் உணவு, உடை, பொழுதுபோக்கு... முதலிய அனைத்துப் பழக்க வழக்கங்களையும் அன்னிய மொழியினர்க்கு உரியனவாகவே மாற்றிக் கொண்டு விட்டார்கள். எனவே, மிக விரைவில் தமிழ் மொழியுணர்வோ! தமிழின உணர்வோ!, தமிழ்ப் பண்பாட்டு உணர்வோ! தமிழ் நாகரீக உணர்வோ, தமிழிலக்கிய உணர்வோ, தமிழின வரலாற்றுணர்வோ! தமிழ் மத உணர்வோ! தனித்த பண்புகளோடு வாழமாட்டா! வாழமாட்டா! வாழமாட்டா! வாழமுடியாது! வாழமுடியாது!! வாழமுடியாது!!!.... என்ற நிலை ஏற்பட்டு விட்டது! ஏற்பட்டு விட்டது!! ஏற்பட்டு விட்டது!!! ஏற்பட்டே விட்டது.

(12) இப்படி இனிமேல் தமிழ்மொழியோ! தமிழினமோ! தமிழ்நாடோ! .... தனித்துப் பிரித்துப் பெயரிட்டு அறியும் அளவிற்கு இருக்க முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது!!!!.... என்ற நிலை மிகத் தெளிவாகப் புரிந்து விட்ட பிறகுதான் இம்மண்ணுலகுக்குத் தமிழ்மொழியைத் தந்தருளிய அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்களின் வழித் தோன்றலான இன்றைய பதினெண் சித்தர் பீடாதிபதி, நான்குயுக நாயகம், ஆதிஅனாதி சத்திகள் சன்னிதானம், கருமூலப் பண்டாரம், குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் "தமிழ் மொழி" பற்றியும், தமிழ்மொழியில் உள்ள "இந்து வேதம்" பற்றியும், தமிழ்மொழியில் உள்ள இந்து வேதமதமான இந்துமதம் பற்றியும் இந்த உலகில் தோன்றக் கூடிய அனைத்து விதமான பயிரினங்களும் உயிரினங்களும் நல்வாழ்வு வாழுவதற்காகப் பதினெண்சித்தர்கள் அருளிய இவ்வுலகின் மூலவேதமும் முதல்வேதமும் பொதுவேதமும் தேவைக்கேற்பக் காலங்கள் தோறும் கடவுள்களே நேரில் வந்து தேவையான விளக்கங்கள் வழங்கிக் கொண்டே இருக்கின்ற வேதம்!.... என்ற அரிய கூரிய சீரிய நேரிய வீரிய பண்புகளுக்கும் பெருமைகளுக்கும் பயன்களுக்கும் உரிய இந்துவேதத்தின் வித்துக்களாக, இந்துவேதத்தின் நாற்றுக்களாக, இந்துவேதத்தின் மூலவர்களாக, இந்துவேதத்தின் காவலர்களாக, இந்துவேதத்தின் நாயகர்களாக, இந்துவேதத்தின் வாரிசுகளாக, பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம் படிக் கருப்புக்களாலும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களாலும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுள்களாலும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்களாலும், முப்பத்து மூவாயிரம் கோடி தேவர்களாலும், ஆயிரம் கோடி தேவதைகளாலும், நாற்பத்தெட்டாயிரம் கோடி இருடிகளாலும், தொண்ணூற்றுயிரம் கோடி கணங்களாலும், நூற்றெட்டாயிரம் கோடி முனிவர்களாலும், .... தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட தமிழர்களைப் பற்றியும், இந்த மண்ணுலகத்துக்குரிய **'அருளுலகின் பிறப்பிடம்', 'அருளுலகின் நாற்றங்கால்', 'அருளுலகின் நாற்றுப் பண்ணை', 'அருளுலகின் விதைப்பண்ணை', ... என்ற தகுதியையும், மதிப்பையும், உரிமையையும், பெருமையையும், பெற்றுள்ள தமிழ்நாட்டைப் பற்றியும் தமிழர்களிடம் மட்டுமல்ல! திராவிடர்களிடம் மட்டுமல்ல! இந்தியர்களிடம் மட்டுமல்ல! உலகம் முழுவதுமுள்ள அனைத்து வகைப்பட்ட மக்களிடமும் விளக்கி யுரைத்திட முடிவு கட்டித் திட்டங்கள் தீட்டிச் செயலாக்கப் புறப்பட்டுள்ளார்! புறப்பட்டுள்ளார்!! புறப்பட்டுள்ளார்!!! ... புறப்பட்டு விட்டார்! புறப்பட்டு விட்டார்!! புறப்பட்டு விட்டார்!!!** இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், **ஞானாச்சாரியார்!** எனவே இவரைப் புரிந்து தமிழ்நாட்டில், தமிழர்களில், தமிழ்மொழி கற்றிட்ட பெருமக்களே! .... இவருக்குதவ முன்வாருங்கள்! முன்வாருங்கள்!! முன்வாருங்கள்!!!

(13) அதாவது 'இந்து' என்ற சொல்லுக்குத் தமிழ், அமிழ்து, அண்டபேரண்டம், பயிரின உயிரினங்கள், நல்வாழ்வு, மானுடர், அன்பு, அமைதி, ஒற்றுமை, மகிழ்ச்சி, கடவுள், பத்தி, இல்லறம், ... என்று (கணக்கற்று) ஆயிரத்துக்கும் மேற்பட்ட சொற்களில் பதினெண் சித்தர்களாலும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களாலும், பொருள் விளக்கம் தரப் படுவதாலும், இந்து வேதத்தின் முன்னூற்றுத் தொண்ணூற்றுறு நூல்களில் உள்ள கருத்துக்களும், ஞான, அகஞான, புறஞான, விஞ்ஞான, மெய்ஞ்ஞானச் செய்திகளும், அண்டபேரண்ட மக்களையெல்லாம் நல்வழிப்படுத்தி, ஒற்றுமையுடன் வாழச் செய்யும் ஆற்றலுடையவை என்பதாலும், 'அருளூறு அமுதச் செந்தமிழ் மொழியில் அருளப் பட்டுள்ள இந்து வேதத்தை உலக மொழியினர், இனத்தவர், நாட்டவர் அனைவருக்கும் எடுத்துக் கூற வேண்டியது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும். இதற்குத் தமிழகத்தில் பிறந்து தமிழ் கற்றுத் தேறியவரின் சிந்தைத் திறம்

நன்கு பயன்படும்! அடுத்த படியாகத் தமிழகத்தில், தமிழினத்தில் பிறந்து, தமிழ் கற்றுத் தேறியவரின் நெஞ்ச உரம் மிக நன்கு பயன்படும். அதற்கும் அடுத்தபடியாகத் தமிழகத்தில், தமிழினத்தில் பிறந்து உண்மையான தமிழ்ப்பற்று, பாசம், ஆர்வம், ஈடுபாடு காரணமாகத் தமிழ் கற்றுத் தேறியவரின் **உணர்வுத் தரமும் திறமும்** மிகமிக நன்கு பயன்படும் என்று இந்துவேதத்திலேயே கூறப்படுகிறது.

எனவேதான், "... சங்க இலக்கியங்கள், திருக்குறள், நாலடியார், ஐம்பெருங் காப்பியம் முதலிய நூல்களின் கருத்துக்கள் உலக மக்கள் அனைவருக்குமே பயன்படக் கூடியவை...." என்று **தமிழின் பெருமையை! தமிழரின் பெருமையை!, தமிழ்நாட்டின் பெருமையைப் பறை சாற்றுவது போல்**,

"... அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியிலுள்ள இந்து வேதம்தான் உலக மக்களின் அகவாழ்வுக்கும், புறவாழ்வுக்கும், தனிமனித வாழ்வியலுக்கும், குடும்ப வாழ்வியலுக்கும், சமுதாய வாழ்வியலுக்கும் **'விழியாக', 'வழியாக', 'வழிகாட்டியாக', 'வழித்துணையாக', 'வழிப்பயனாக' இருக்கின்றது! இருக்கின்றது!! இருக்கின்றது**!!!.

"அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியிலுள்ள இந்துவேதத்தில்தான் உலகம் முழுவதுமுள்ள எல்லா மொழியினரும், இனத்தவரும், நாட்டவரும், தங்கள் தங்களுக்குரிய கடவுள்களைச் சந்திக்கவும், கடவுள்களோடு தொடர்பு கொள்ளவும், கடவுள்களாகவே மாறவும், அருள் விளையும் பத்தி சத்தி சித்தி முத்திகளைப் பெறவும் வழிவகைகள் உள்ளன! உள்ளன!! உள்ளன!!!"

"கடவுள் மொழி, தெய்வமொழி, தேவமொழி, இவ்வுலகின் முதல்மொழி, இவ்வுலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழி என்ற உரிமைக்கும், பெருமைக்குமுரிய அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளப் பெற்றுள்ள இந்து வேதத்தால்தான் மனித வாழ்வில் அன்பும், பண்பும், இனிமையும், கனிவும், அமைதியும், நிறைவும், நிம்மதியும், ஒற்றுமையும், பற்றும், பாசமும், நட்பும், தோழமையும் பூத்துக் குலுங்கவும், காய்த்துக் கனிந்திடவும் செய்ய முடியும்! செய்ய முடியும்!! செய்ய முடியும்!!!..."

என்று வீரமுழக்கமிட முன் வர வேண்டும்! முன்வர வேண்டும்!! முன்வர வேண்டும்!!!

**எனவேதான், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், சித்தர், "தமிழர்களே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்" என்று அழைப்பு விடுக்கிறார்! அழைப்பு விடுக்கிறார்!! அழைப்பு விடுக்கிறார்!!!**

*[... ... தொடர்ச்சி அடுத்த இதழில்]*

## குருதேவர் என்பவர் யார்?

"... குருதேவர் என்பவர் யாருக்கும் முதலாளியாகவோ, தலைவனாகவோ இருக்க விரும்புகிறவர் அல்ல. குருதேவர் அவர்கள், அனைவருக்குமே நலம் விளைவிக்கும் தொழிலாளியாகவும், தொண்டர்களாகவும் இருப்பவர்களே; அவர்களுடைய வாக்கும், வாசகமும், நோக்கும், போக்கும், ஊக்கும், ... அனைவரின் நலிவு, மெலிவு, முடக்கம், ஒடுக்கம், தொல்லை, துன்பம், தோல்வி, கவலை, ஏக்கம், ஏமாற்றம், புரியாமை, அறியாமை, இல்லாமை, இயலாமை, ... முதலிய குறைகளை அகற்றுவதற்காகத்தான் பயன்படுபவை. ..."

